**செய்தி வெளியீடு எண்:542** **நாள்: 19.08.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (19.8.2017) திருவாரூரில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

**அ**ன்பின் வடிவம்

**ஆ**ற்றலின் பிறப்பிடம்

**இ**தய தெய்வம்

**ஈ**கையின் அடையாளம்

**உ**ழைப்பின் உருவம்

**ஊ**க்கத்தின் உதாரணம்

**எ**ல்லோருக்கும் தாய்

**ஏ**ழைகளின் குலவிளக்கு

**ஐ**ந்தெழுத்து மந்திரம்

**ஒ**ப்பில்லா ஆளுமை

**ஓ**ங்கி ஒலித்த உரிமைக்குரல்

**ஔ**வையின் அவதாரம் என

திரும்பும் திசையெல்லாம் தெய்வமாய் நிற்கும்
மாண்புமிகு புரட்சித்தலைவி
**'அம்மா'** அவர்களை வணங்குகிறேன்.

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மகத்தான விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் மு. **தம்பிதுரை** அவர்களே!

தலைமையுரை ஆற்றிய

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **ப. தனபால்** அவர்களே!

முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.**ஆர்.காமராஜ்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர்

திரு.**இரா. வெங்கடேசன்,** இ.ஆ.ப., அவர்களே!

நாகப்பட்டினம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்
டாக்டர் **கே. கோபால்** அவர்களே!

தஞ்சாவூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **கு. பரசுராமன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
திரு. **திண்டுக்கல் சி. சீனிவாசன்** அவர்களே!
திரு. **கே.ஏ. செங்கோட்டையன்** அவர்களே!
திரு. **செல்லூர் கே. ராஜூ** அவர்களே!
திரு. **பி. தங்கமணி** அவர்களே!
திரு.**எஸ்.பி. வேலுமணி** அவர்களே!

திரு.**டி.ஜெயக்குமார்** அவர்களே!
திரு. **சி.வி.சண்முகம்** அவர்களே!
திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!

டாக்டர் **வி.சரோஜா** அவர்களே!
திரு. **எம்.சி. சம்பத்** அவர்களே!
திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!
திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!
திரு. **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** அவர்களே!

திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!
திரு. **கடம்பூர் ராஜூ** அவர்களே!
திரு.**ஆர்.பி. உதயகுமார்** அவர்களே!

திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!
திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!

திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!
திரு. **பா.பெஞ்சமின்** அவர்களே!
டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!

திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!
டாக்டர் **எம்.மணிகண்டன்** அவர்களே!
திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!
திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!

திரு.**சேவூர் எஸ்.இராமச்சந்திரன்** அவர்களே!
திருமதி. **எஸ்.வளர்மதி** அவர்களே!
திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி **பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **இல. நிர்மல் ராஜ், இ.ஆ.ப.,** அவர்களே!

தலைமைக் கழக நிர்வாகிகளே!
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே!

அரசு அலுவலர்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், வேளாண்மை, ஆன்மீகம்,
தமிழ், கலை ஆகிய நான்கும்
கலந்த ஒரு அழகு மாவட்டமாக திகழ்கிறது.

திருவாரூர் ‘அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில் காலத்தால் கணக்கிட முடியாத
பழம் பெருமை வாய்ந்தது.

மன்னார்குடி மதிலழகு,
வேதாரண்யம் விளக்கழகு,
திருவிடைமருதூர் தெருவழகு,
திருவாரூர் தேரழகு என்பார்கள்.

திருவாரூர் அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில் தேர்தான் தமிழ்நாட்டிலேயே உயரமான தேர்.
திருவாரூர் ஆழித்தேரை செப்பனிட்டு,
ஓடச் செய்தது ‘அம்மா’ அரசு.

அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில்,
ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்,
மாணிக்கவாசகர் போன்ற
சமயக் குரவர்களால் பாடல் பெற்றது.

பஞ்சபூதங்களில் நிலம் அல்லது
மண் தத்துவத்தை உடையது திருவாரூர்.
திருவாரூரில் பிறப்பதே முக்தி என்கிறார்கள்.

சப்தவிடங்கத் தலங்களுள்
முதன்மையானது திருவாரூர்.

தியாகராஜ திருக்கோயில் எழுந்தருளியுள்ள
இந்த இடம், சக்தி பீடங்களுள்
ஞானசக்தி பீடமாகும்.

அதனால்தான், இந்தக் கோயிலில் மகாசரஸ்வதிக்கென்று
தனி சந்நிதி இருக்கிறது.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள
கூத்தனூரில் ஒட்டக்கூத்தரால்
3 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட,
மகா சரஸ்வதி ஆலயம்
உலகப்புகழ் பெற்றது.

காரணம், இந்தியாவிலேயே,
கல்விக்கடவுள் கலைவாணி
சரஸ்வதிக்கென்று
உள்ள தனி ஆலயம் இது.

மன்னார்குடியில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட
அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில் இம்மாவட்டத்திற்கு மேலும்
சிறப்பு சேர்க்கிறது.

நீடாமங்கலம் வட்டத்திலுள்ள
திருராமேஸ்வரம் கோயில்
11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட
பழமையான கோயில் ஆகும்.

இந்த மாவட்டத்தைச் சார்ந்த
முத்துப்பேட்டை தர்கா புகழ் பெற்றதாகும்.

ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும்
அறிவு மணம் கமழும் அற்புதமான
மாவட்டம் திருவாரூர்.

ஒரு பசுவுக்கு நீதி வழங்க
தன் சொந்த மகனையே
தேரை ஏற்றிக் கொன்ற
மனுநீதி சோழன் ஆண்ட மண்

இந்தத் திருவாரூர் மண்.

செங்கோல் தவறாமல்,
நீதிக்கு இலக்கணமாகத் திகழ்ந்த
மனுநீதி சோழன், திருவாரூரையே தன் தலைநகரமாகக் கொண்டவன்.

தமிழரைத் தலைநிமிர வைத்த
இந்த நீதி வரலாறைப் பிற்காலச் சோழர்கள் கோயிலுக்குள்ளேயே
கல் தேராக வடிவமைத்து வைத்துள்ளனர்.

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான
தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர்,
சியாமா சாஸ்திரிகள் ஆகியோர்
இந்த மண்ணில் பிறந்தவர்கள்.

தமிழ் ஓலைச்சுவடிகளை
ஓடி ஓடிச் சென்று சேகரித்து
தமிழ் இலக்கியங்களை
உலகம் அறியச் செய்த
'தமிழ் தாத்தா'
உ.வே.சாமிநாதய்யர் பிறந்த
உத்தமநாதபுரம் இந்த மாவட்டத்திற்கு
மேலும் புகழ் சேர்க்கிறது.

ஆங்கிலேயர்களுக்கே ஆங்கிலப் புலமையைக்
கற்றுத்தந்த "சில்வர் டங்" சீனிவாச சாஸ்திரிகள்
இம்மாவட்டத்தில் உள்ள வலங்கைமானை சார்ந்தவர்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள்
திருவாரூரில் பிறந்து,
தமிழுக்குத் தொண்டாற்றியிருக்கிறார்.

அவருடைய பேச்சும், எழுத்தும்
தமிழ் உள்ளவரை உயிர் வாழும்.

இயக்குநர் இமயம்

கே.பாலச்சந்தர் அவர்களை
பெற்றெடுத்து புகழ் பெற்றது நன்னிலம்.

இப்படி இந்த மண்ணில் பிறந்த மாமனிதர்களின்
பட்டியல் நீண்டு கொண்டே போகும்.
அறியாமை, மூடநம்பிக்கை,
சாதிய வேற்றுமைஆகியவற்றிற்கு
எதிராக போரிட்ட பகுத்தரிவுப் பகலவன்
தந்தை பெரியார் அவர்களின்,
திருஉருவச்சிலை ஒன்று

திருவாரூர் மாவட்டத்தின்,
வடக்கு நுழைவாயிலான கீரனூரில்,
விவசாய பெருங்குடி மக்களால்
நிறுவப்பட்டுள்ளதை கொண்டும்,

இந்த திருவாரூர் மாவட்டத்தின் மண் –
திராவிடம்
உரம் ஏற்றப்பட்டுள்ளது என்பதை
என்னால் உணர முடிகிறது.

எல்லாப் புகழுக்கும்,
சிறப்புக்கும் மேலாக
இந்த மாவட்டம்
உழவர்களும் – உழைப்பாளர்களும்
நிறைந்த ஒரு
விவசாய மாவட்டம்
என்பதில்தான் பெருமை கொள்கிறது.

இந்த மாவட்டத்தின்
நெல் உற்பத்தியின் அளவு
8 இலட்சத்து 52 ஆயிரத்து 925 டன்னாகும்.
இது மாநில உற்பத்தியில் 10.7 சதவிகிதமாகும்.

தமிழ்நாட்டில் அதிக அளவு
நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம்
திருவாரூர் மாவட்டமாகும்
என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உண்ண உணவு, உடுக்க உடை,
இருக்க இருப்பிடம் ஆகிய மூன்றுதான்
நாட்டு மக்களுக்கு அடிப்படைத்
தேவையாக கருதப்படுகின்றது.

அதில் முக்கியத் தேவையாகிய
உண்ண உணவு வழங்கக்கூடிய
மாவட்டமாக திருவாரூர் மாவட்டம் திகழ்கிறது.

விவசாயத்தின் அவசியத்தை, விவசாயிகள்
அருமைகளை தன் படங்களின் மூலமாகவும்,
பாடல்களின் மூலமாகவும் உலகுக்கு
எடுத்துச் சொன்னவர்
மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள்.

‘கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி – விவசாயி’
என்று விவசாயிகளை
கடவுளின் குழந்தைகளாக மதித்தவர்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதனால்தான் புரட்சித்தலைவர் அவர்கள்
பல படங்களில் விவசாயியாக நடித்திருப்பார்.

அத்தகைய கதா பாத்திரங்கள்தான்
அவருக்கு அதிக செல்வாக்கைப் பெற்றுத் தந்தன.

புரட்சித்தலைவர் நடித்த
'விவசாயி' படம் 100 நாட்களை
கடந்து ஓடி சாதனை நிகழ்த்தியது
என்றால் அந்தப் படத்தை விவசாய பெருமக்கள்
அதிகமாக பார்த்திருக்கிறார்கள்
என்றுதான் அர்த்தம்.

"**சும்மா கிடந்த நிலத்தை கொத்தி,**
**சோம்ப–லில்லாம ஏர் நடத்தி,**

**கம்மாக் கரையை ஒசத்திக் கட்டி,**
**கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி,**
**சம்பாப் பயிரை பறிச்சி நட்டு,**
**தகுந்த முறையில் தண்ணீர் விட்டு,**

**நெல்லு வெளைஞ்சிருக்கு** –
**வரப்பும் உள்ளே மறைஞ்சிருக்கு.**

**அட காடு வெளைஞ் – சென்ன மச்சான்,**
**நமக்கு கையுங்காலுந்தானே மிச்சம்**"

என்று **நாடோடி மன்னன்** படத்தில்
கதாநாயகி பாடுவார்.

அதற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

**"இப்போ காடு வெளையட்டும் பொண்ணே –**
**நமக்கு காலமிருக்குது பின்னே**

என்று விவசாயிகளுக்கு ஊக்கம்

தரும் வகையில்  பாடுவார்.

அதன் பின்னர்,
விவசாயிகளின் வாழ்க்கையில்
ஒளியேற்றுவதற்காக,

தான் பின்னாளில்
தமிழ்நாட்டின் முதலமைச்சராக  வருவோம்
என்று தீர்க்க தரிசனமாக உணர்ந்து

“**நானே போடப் போறேன் சட்டம்
பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்
நாடு நலம் பெறும் திட்டம்**”

என்று பாடி அந்தப் பாட்டை முடிப்பார்.

“**நல்ல நல்ல நிலம் பார்த்து,
நாமும் விதை விதைக்கணும்**” என்றும்

விவசாயம் செய்யும் முறையை தன்
பாடலின் வாயிலாக சொன்ன ஒரே நடிகர்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.

அதனால்தான் பின்னாளில்
புரட்சித்தலைவர் அவர்கள்
முதலமைச்சரானவுடன்,

330 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை
தள்ளுபடி செய்ததோடு
பயிர்ப் பாதுகாப்பு காப்பீட்டு
முறையையும் கொண்டு வந்தார்.

**“அன்னமிட்ட கை, நம்மை ஆக்கி விட்ட கை” என்றும்**

**“நாளை உலகை ஆளவேண்டும்**

**உழைக்கும் கரங்களே''**

என்று உழைக்கும் கைகளை புகழ்ந்தவர் புரட்சித்தலைவர் அவர்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
ஒரு நாட்டின் வெற்றி தோல்வியை
விவசாயம்தான் தீர்மானிப்பதாக எண்ணினார்.
பொதுவாகவே, உழைக்கும் மக்களுக்கு
ஒரு துன்பம் என்றால்
முதலில் உதவிக்கரம் நீட்டுபவர்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களாகத்தான் இருப்பார்.

தவறை தட்டிக் கேட்கும் குணம்
அவர் ரத்தத்திலேயே ஊறியிருந்தது.

அதற்கு உதாரணமாக,
அவருடைய வாழ்க்கையில்
நடந்த ஒரு சம்பவத்தையே எடுத்துக் கூறலாம்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
கும்பகோணம் யானையடி பள்ளியில்
மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது,
அந்த வகுப்புத் தலைவன்
வகுப்புக்கு தண்ணீர் பானை வாங்க
ஆளுக்கு காலணா பணம் வசூலித்தான்.

ஒரு ரூபாய் சேர்ந்த பிறகு
வகுப்புத் தலைவன்
முக்கால் ரூபாய்க்கு பானை வாங்கிவிட்டு,
கால் ரூபாய்க்கு தின்பண்டம் வாங்கி
சாப்பிட்டு விட்டான்.

இதை அறிந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அந்த வகுப்புத் தலைவனிடம்,
"மாணவர்களின் பொது பணத்தை

நீ சாப்பிட்டது தப்பு!
அதை திருப்பிக் கொடுத்து விடு” என்றார்.

கோபம் கொண்ட அந்த வகுப்புத் தலைவன்
சிறுவன் எம்.ஜி.ஆரை
தகாத வார்த்தைகளால் திட்டினான்.

பொறுத்துக் கொள்ள முடியாத
சிறுவன் எம்.ஜி.ஆர்.
அந்த மாணவனை பளார்
என்று அறைந்து விட்டார்.

பஞ்சாயத்து, வகுப்பு ஆசிரியரிடம் சென்றது.
“நான் வகுப்புத் தலைவனை
அறைந்தது தப்புதான்,
மன்னித்துவிடுங்கள்'' என்றார் எம்.ஜி.ஆர்.

ஆசிரியர் எம்.ஜி.ஆரை தட்டிக் கொடுத்து,
பிறர் பொருளை எடுப்பது தவறு என்றும்,
அந்தத் தவறை தட்டிக் கேட்க தயங்கக்கூடாது
என்ற தைரியமும்,

தவறு என்றால் மன்னிப்பு
கேட்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும்,
சிறுவன் எம்.ஜி.ஆரிடம் இருப்பதைக் கண்டு
ஆசிரியர் வியந்தார்.

உடனடியாக அந்த
வகுப்புத் தலைவனை மாற்றிவிட்டு,
சிறுவன் எம்.ஜி.இராமச்சந்திரனை
வகுப்புத் தலைவனாக்கினார்.

இந்த சம்பவத்தைப் போலவே,
பிற்காலத்தில் அவருடைய அரசியல்
வாழ்க்கையிலும் நடந்தது.

தான் சார்ந்திருந்த கட்சியிடம்

கணக்கு கேட்டதற்காக
கட்சியிலிருந்தே நீக்கப்பட்டார்.

தவறை தட்டிக் கேட்கும்
புரட்சித்தலைவர் அவர்களின் குணம்தான் பின்னாளில் தமிழ் நாட்டின்
தலையெழுத்தையே மாற்றி எழுதியது என்பது
உங்கள் அனைவருக்கும் தெரியும்.

அந்த குணம்தான் அவரை
தமிழ்நாட்டின் முதலமைச்சராக்கியது.

காலம் மாறினாலும்
தன் குணத்தை மாற்றிக் கொள்ளாத
கொள்கை விளக்காக திகழ்ந்தவர்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
புரட்சித்தலைவர் அவர்களின்
குணங்களையும், கொள்கைகளையும்
அதிகமாக தெரிந்து வைத்திருந்தவர்.

அதனால்தான்
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
அரசியல் வாரிசாக,
தமிழ்நாட்டின் முதலமைச்சராக
பொறுப்பேற்ற பிறகு

காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு
அதிக முக்கியத்துவம் கொடுத்து
திட்டம் தீட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
காவிரி நதிநீர் பிரச்சனைக்கு
அதிக அழுத்தம் கொடுத்து
நீதிமன்றங்களில் வாதிட்டு,
வெற்றியும் பெற்றார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
தொடர் முயற்சியால் 19.2.2013 அன்று,
மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்ற
இறுதி ஆணையை அந்த உரிமையை பெற்றுத் தந்தவர்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,
டெல்டா மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம்
மேற்கொள்வதை அதிகம் விரும்பினார்கள்.

தன் சுற்றுப் பயணத்தின் போதெல்லாம்,
டெல்டா மாவட்ட மக்களிடம்,
மனம் திறந்து பேசுவார்கள்.

8.3.2003 அன்று
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
இதே திருவாரூரில் நடந்த
ஒரு கூட்டத்தில் ஆற்றிய உரை
வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

அந்தக் கூட்டத்தில்
ஆண்களைவிடப் பெண்கள்
அதிகமாகத் திரண்டிருந்ததைக் கண்ட
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
மகிழ்ச்சியுற்று, பூரிப்படைந்தார்கள்.

அப்போது,
‘‘உலகத்தில் இருந்த பெண் தலைவர்களின்
வரலாற்றை நாம் எடுத்துப் பார்த்தோமானால்,
அவர்கள் அனைவருமே
மன்னர்களின் மகள்களாகவோ,
மனைவிகளாகவோ இருந்திருக்கிறார்கள்.

ஜனநாயக முறை ஆட்சி
நடக்கின்ற நாடுகளில்

பெண் தலைவர்கள் எப்போதுமே
பெரிய தலைவர்களின் – அதாவது
ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி
ஆகியோர்களின் மகளாகவோ, மனைவியாகவோ
இருந்திருக்கிறார்கள்.

முதலாம் ராணி எலிஸபெத்,
ராணி விக்டோரியா,
இன்றைய ராணி எலிஸபெத்
இவர்கள் எல்லாம் மன்னர் பரம்பரையில் பிறந்தவர்கள்.

மன்னர்களின் மகள்களாகப்
பிறந்ததனால் தான் அவர்கள்
ராணியாக முடிந்தது;
நாட்டை ஆள முடிந்தது.

இந்த ஆசியக் கண்டத்தை
எடுத்துப் பார்த்தோமானால்

ஸ்ரீமாவோ பண்டாரநாயகே,
திருமதி பெனாசிர் பூட்டோ,
அன்னை இந்திரா காந்தி,
பங்களாதேசை ஆண்ட கலிதாஜியா,
ஷேக் ஹசினா ... இவர்கள்

அந்தத் தலைவர்களின்
மனைவியாகவோ – மகளாகவோ
இருந்ததால்தான் அவர்களால்
அந்தப் பதவிக்கே வர முடிந்தது.

அத்தகைய எந்தப் பின்னணியும் இல்லாமல்,
அத்தகைய எந்த ஒரு ஆதரவும் இல்லாமல்,
அத்தகைய எந்தப் பாரம்பரியமும் இல்லாமல்,
நான் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறேன்.
என்றால்,

தமிழகத்தில் இருக்கின்ற

மகளிர்  எதையும் சாதிக்க முடியும்
என்பதைத்தான் இது காட்டுகிறது’’ என்று
பேசத் தொடங்கி,

பேச்சின் நிறைவில்,
‘‘எத்தனையோ சோதனைகளின் கீழ்,
எங்களுடைய அரசு
பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச்
செயல்படுத்தி வருகிறது.

இதற்கு சில இடர்பாடுகளை,
சில நேரங்களில் இயற்கையும் ஏற்படுத்துகிறது.

சில நேரங்களில் மனிதர்களும்
ஏற்படுத்தி வருகின்றனர்.

ஆனால், எத்தனை இன்னல்கள் வந்தாலும்,
தடைகள் ஏற்படுத்தினாலும்,
எதற்காகவும் நாங்கள் தயங்குவதில்லை.
யாருக்காகவும் நாங்கள் அஞ்சுவதில்லை
என்பதை எனது அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவருக்கும்
கூறிக்கொள்கிறேன்’’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
உணர்ச்சி  ததும்ப பேசினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின்
அந்த உரையின் வழியில்தான்
தமிழ்நாட்டில் இன்று அம்மாவின் ஆட்சி
நடந்து வருகிறது.

சிறிய மாவட்டமாக இருந்தாலும்
இது சிறந்த மாவட்டமாக,
உயர்ந்த மாவட்டமாகத் திகழ்கிறது.

இந்த மாவட்டம் மேலும் மேலும்
சிறக்க வேண்டுமென்றுதான்
மாண்புமிகு அம்மா அவர்கள்
பார்த்துப் பார்த்துப்

பல திட்டங்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களைத் தொடர்ந்து

அம்மா அவர்கள் வழியில் நடக்கும்
அம்மாவின் அரசு பல புதிய திட்டங்களை
வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களின் வழியில் நடக்கும்
இந்த அரசு பதவியேற்ற

குறைந்த காலங்களிலேயே
பல திட்டங்களைத் துவக்கி வைத்தும்,
புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் இருக்கிறது.

அவற்றை முழுமையாகக்
கூற நேரமில்லை என்றாலும்
ஒருசிலவற்றை மட்டும்
இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

- மகசூல் பாதித்த ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 361 விவசாயிகளுக்கு 161 கோடியே 22 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

- டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட நடப்பாண்டில் 56 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் “குறுவை தொகுப்புத் திட்டம்” இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- குடிமராமத்துத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் 72 பணிகள் 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 4 கோடியே 99 இலட்சத்து ஓராயிரத்து 620 ரூபாய் மதிப்பீட்டில் 11 ஆயிரத்து 744 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 29 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் வையகளத்தூர் இரயில்வே கடவு இடையே சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 2 துணை மின் நிலையங்கள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளன.
- மனுநீதிச் சோழன் நினைவாக திருவாரூரில் புதிதாக நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின்
எண்ணப்படியே, நாங்களும்,
இந்த மாவட்டத்திற்கு வேண்டிய
அத்தனை திட்டங்களையும் விரைந்து செயல்படுத்துவோம் என உறுதி
கூறுகின்றோம்.

வேளாண் துறை, கூட்டுறவுத் துறை,
காவல் துறை, தொழிற்கல்வித் துறை உள்ளிட்ட
துறைகளின் மூலம் –

ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம்,
அரசு மாணவர் விடுதி, பாலம்,
கூட்டுறவு சங்கங்களின் அலுவலகக் கட்டடங்கள்,
ஆயுதப்படை அலுவலகக் கட்டடம்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்,
அரசு பாலிடெக்னிக் கல்லூரி என

37 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
12 பணிகள் நிறைவு பெற்று
இன்று இந்த இனிய நாளில்
திறந்து வைக்கப்பட்டன.

281 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
35 ஆயிரத்து 918 பேர் பயன்பெறும் வகையில்
பல்வேறு துறைகளின் சார்பாக
நலத்திட்ட உதவிகளும் இன்று வழங்கப்பட்டன.

திருவாரூர் மக்கள்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழாவை
தன் சொந்த மகனுக்கு,
சொந்தச் சகோதரனுக்கு,
சொந்தத் தந்தைக்கு
எடுக்கும் விழாவாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து
நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

சாமானியர்களையும் சரித்திரம் ஆக்கும்
வல்லமையுடையது கழகம்;

வல்லமை உடையவர் மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வளர்ந்தவர்கள் கடைசி வரை
கழகத்திற்கு நன்றியுடையவர்களாக இருந்தால்

இந்தக் கழகம் இன்னும் 100 ஆண்டுகள்
இந்த மண்ணில் வேரூன்றி நிலைத்து இருக்கும்.

இதைக்கூறுகிற போது
ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

முனிவர் ஒருவர் காட்டில் வசித்து வந்தார்.
ஒரு பூனை அவருடன் தங்கி,
அவருக்கு உதவிகள் செய்து வந்தது.

வெளி உலகம் தெரியாமல்
முனிவரின் ஆசிரமத்துக்குள்ளேயே
வளர்ந்த பூனை அது.

பூனையின் மேல் முனிவருக்கும்,
முனிவர் மேல் பூனைக்கும்
நல்ல பாசம் இருந்தது.

ஒரு நாள் பூனை, காட்டில்
முதன்முதலாக நாய் ஒன்றை பார்த்து விட்டது.
தன்னைவிட நாய் பெரிய உருவமாக
இருப்பதைக் கண்டு அஞ்சியது.

நேராக முனிவரிடம் சென்று
“தவ வலிமைமிக்க உங்களுடன்
நான் இருந்து என்ன பயன் ?

இந்த நாய் என்னைவிட உருவத்தில்
பெரியதாகவும், வலிமை மிக்கதாகவும் இருக்கிறது.
அதனால், என்னை நாயாக மாற்றி விடுங்கள்”
என்று பூனை முனிவரிடம் வேண்டியது.

முனிவரும், தன் தவ வலிமையால்
பூனையை – நாயாக மாற்றினார்.
பூனை மகிழ்ச்சியடைந்தது.
சிறிது நாட்களுக்குப் பிறகு,
ஒரு புலியைப் பார்க்கும் வாய்ப்பு
நாயாக மாறிய பூனைக்கு ஏற்பட்டது.

புலியைப் பார்த்ததும் பூனைக்கு
வியப்பும், பயமும் ஏற்பட்டது.

மீண்டும் முனிவரிடம் போய்,
நாயாக உள்ள தன்னைப்
புலியாக மாற்றினால் நல்லது என்றது.

முனிவரும் அவ்வாறே செய்தார்.
நாயாக இருந்த பூனை தற்போது
புலியாக மாறியது.

அதன் பிறகு ஒரு நாள் சிங்கம் ஒன்றை
புலியாக இருந்த பூனைப் பார்த்தது.

இப்போது,
புலி உருவத்தில் இருந்த பூனை முனிவரிடம், –

“முனிவரே! என்னைச் சிங்கமாக
மாற்றுங்கள்” என்றது.
முனிவரும் அப்படியே செய்தார்.

‘இனி இந்தக் காட்டுக்கு
நான்தான் ராஜா –
என்னை யாராலும்,
ஒன்றும் செய்துவிட முடியாது’ – என்றபடி
சிங்க உருவப் பூனை கர்வத்துடன்
காட்டில் உலாவியது.

பிறகு, ‘சரபம்’ என்ற
எட்டுக் கால்களை உடைய
விசித்திரமான பெரிய மிருகம்
ஒன்று போய்க் கொண்டிருந்தது.

அனைத்து மிருகங்களும்
அதைப் பார்த்து பயந்து பதுங்கின.

அதைப் பார்த்த சிங்க உருவம் கொண்ட
பூனைக்கு பயம் வந்தது.
முனிவரிடம் ஓடியது.

“குருவே! எனது கடைசி ஆசை.
அதோ அந்த ‘சரபம்’ மிருகமாக
என்னை மாற்றுங்கள்
நான் இந்தக் காட்டுக்கே
பாதுகாப்பாக இருப்பேன்’ என்றது.

முனிவரும் சிங்க உருவத்திலிருந்த பூனையை
சரபம் மிருகமாக மாற்றினார்.

அவ்வளவுதான்!

சரபமாக மாறிய பூனை
ஆணவமாகக் காடு முழுவதும் சுற்றித் திரிந்தது.

எல்லா மிருகங்களும் தன்னைக் கண்டு
அஞ்சுவதைப் பார்த்து பார்த்து மகிழ்ந்தது.

திடீரென்று ஒருநாள் அதற்கு
ஒரு யோசனை தோன்றியது.

இந்த முனிவர்,  தன்னைப் போல
வேறு ஏதாவது மிருகத்தை,
சரபமாக  மாற்றி விட்டால்
தனக்கு ஆபத்து ஏற்பட்டு விடும்.

இனிமேல்,  தனக்குப் போட்டியாக
யாரும் இந்தக் காட்டுக்குள்
வராமல் இருக்க வேண்டுமென்றால்

முனிவரைத் தீர்த்துக் கட்டுவதுதான்
சிறந்த வழி என்று தீர்மானித்து,

முனிவரைக் கொல்வதற்காக
கொலைவெறியுடன் சென்றது.

சரபம் உருவில் இருந்த பூனையின்
கெட்ட எண்ணத்தை,
தன் தவ வலிமையால்
தெரிந்து கொண்ட முனிவர்,
பூனையிடம்,

“உருவத்தில் நான்
உன்னை எப்படி  மாற்றினாலும்,
நீ இன்னும் பூனையாகவே இருக்கிறாய்!” என்று
அந்தச் சரபம் மிருகத்தை
பழையபடி பூனையாக மாற்றினார்.

பூனை வாலை சுருட்டிக்கொண்டு

முனிவரின் ஆசிரமத்தில்
ஒரு மூலையில் படுத்துக் கொண்டது.

இந்தக் கதையில் வரும்
முனிவர் என்பவர்
**அனைத்திந்திய அண்ணா திராவிட**
**முன்னேற்றக் கழகம்** என்பதை கூறிவிடுகின்றேன்.

பூனை யாராக இருக்கும்
என்பதை உங்கள் முடிவுக்கே
விட்டு விடுகின்றேன்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய கழகத்திற்கு,
களங்கம் விளைவிப்பவர்கள் –
யாராக இருந்தாலும்,
இந்த பூனையின் கதிதான் ஏற்படும்
என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதைக் கழக உடன்பிறப்புகள்
மனதில் நிறுத்தி,
ஒற்றுமையுடன் செயலாற்றி,
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் விருப்பத்தையும்,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களையும் நிறைவேற்ற
இந்த இனிய நாளில் உறுதியேற்போம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அம்மா அவர்களது ஆட்சிக்காலத்திலே விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை வாரி வழங்கினார்கள். அதே வழியில் வந்த அம்மாவினுடைய அரசு அந்த விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை இன்றைக்கு தமிழகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதில் ஒன்று தான் குடிமராமத்து என்ற அற்புதமான திட்டம். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி 1519 ஏரிகள் விவசாயிகள்

பங்களிப்புடன் அரசும் சேர்ந்து இந்த திட்டத்தை துவங்கி, இப்பொழுது இந்தத் திட்டம் நிறைவு பெறுகின்ற நிலையிலே இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபொழுது, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண் விவசாயிகளால் இலவசமாக எடுத்துச் செல்லப்பட்டு வயல்களில், தோட்டங்களில் அந்த வண்டல் மண்ணை பரத்தி அந்த விவசாயிகள் பயிரிடுகின்றபொழுது, அதில் அதிகமான விளைச்சல் பெற்று, அதிகமான லாபம் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித்தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட காலமாக விவசாயிகள் தூர் வாரவேண்டும் என்று கோரிக்கை வைத்ததார்கள், பல ஆண்டுகாலமாக தூர்வாரப்படாமல் இருந்தது. தூர் வாருவதன் மூலமாக குளம் ஆழமாகிறது, விவசாயிகளுக்கு தேவையான வண்டல் மண் கிடைக்கிறது, குளங்கள் ஆழமாவதன் மூலமாக, பருவ காலங்களில் பெய்யும் மழை முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு வறட்சியான காலணத்திலே செறிவூட்டப்பட்டு, வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பாக இருக்கிறது என்று கருதி, மேலும் இந்த திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று விவசாய பெருமக்கள் கோரிக்கை வைத்ததை ஏற்று, அம்மாவினுடைய அரசு 2065 ஏரிகள் 300 கோடி ரூபாய் திட்டத்திலே எடுக்க இருக்கின்றது. இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே தான் இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்கள் மற்றும் பயிர் வகைகளை சேமித்து வைக்க கிடங்குகளை கிட்டத்திட்ட 7879 கிடங்குகள் தமிழ்நாடு முழுவதும் கட்டப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் குறைந்த விலை ஆகும் பொழுது, விவசாயிகளை நஷ்டத்திலிருந்து மீட்க வேண்டும் என்பதற்காகத் தான் விளைபொருட்களை கிடங்குகளிலே வைத்து அதற்கு குறைந்த வட்டியிலே கடனை பெற்று விலை ஏறுகின்றபொழுது அந்த விளைபொருட்களை விற்று அந்தக் கடனை அடைத்து விடலாம்.

அது மட்டுமல்ல. இந்த மாவட்டம் விவசாயிகள், உழைப்பாளிகள் நிறைந்த மாவட்டம். ஆகவே, அவர்களுக்குத் தேவையான பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் 7000 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டிருக்கின்றது. பயிர்க்கடன் எந்த மாவட்டத்தில் எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் வழங்க வேண்டும் என்று அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. ஆகவே, விவசாயிகள் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை பெற்றிருக்கிறது. இந்தியாவிலேயே 3 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி ஐந்தாண்டு காலமாக தொடர்ந்து முன்னிலை வகித்துக் கொண்டிருக்கின்றது. நான்காண்டு காலம் மத்திய அரசினுடைய க்ரிஷ் கர்மான் விருதை தமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது. நான்காண்டு காலமாக மத்திய அரசினுடைய முதல் பரிசை பெற்றிருக்கிறது என்று சொன்னால், அம்மாவினுடைய அரசு இந்தியாவிலேயே 4 முறை முதல் பரிசு பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் சட்ட போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். காவிரி மேலாண்மை வாரியம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் விவசாயிகளினுடைய நன்மைக்காக அம்மா அரசு தொடர்ந்து போராடும், வெற்றி கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கல்வியிலே ஒரு புரட்சி அம்மாவினுடைய அரசு செய்திருக்கிறது. ஒரே நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை ஆசிரியப் பெருமக்களையும் சென்னைக்கு வரவழைத்து, சுமார் 20000–க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணி ஆணை வழங்கிய அரசு அம்மாவினுடைய திருக்கரங்களால் பணி ஆணை வழங்கினார்கள். இதனால் தமிழ்நாட்டில் கல்வியிலே புரட்சி

ஏற்பட்டது. காலிப் பணியிடங்களை நிரப்பியதன் விளைவாக கல்வியில் புரட்சி உருவாக்கப்பட்டது. ஆகவே 2011 ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பொழுது, தமிழகத்தினுடைய உயர்கல்வியினுடைய வளர்ச்சி விகிதம் 21 சதவீதம். 2006ல் இருந்து 2011 வரை திமுக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது 100 க்கு 21 பேர் உயர்கல்வி படித்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு செய்த ஊக்குவிப்புகள், நலத்திட்டங்கள் வழங்கியதன் விளைவாக, கல்வியில் புரட்சி ஏற்பட்டு இன்றைக்கு கல்வியினுடைய சதவீதம், உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை 44.3 சதவீதமாக உயர்ந்திருக்கின்றது. பொருளாதார மேம்பாடுஅடைய வேண்டுமென்று சொன்னால், கல்வி அறிவு முக்கியம், அந்த கல்வி அறிவை இந்த அம்மாவினுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆறு ஆண்டுகளிலே அம்மாவினுடைய அரசு 65 கல்லூரிகளை தமிழகத்தில் உருவாக்கித் தந்திருக்கின்றது. இன்றைக்கு தனியார் கல்லூரியில் படிக்க வேண்டுமென்றால் அதிகமாக செலவாகும். ஏழை, எளிய, , ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதாரண குடும்பத்திலே இருக்கின்ற, கிராமத்திலே வாழ்க்கின்ற ஏழை எளியவர்கள் படிக்கவேண்டுமென்று சொன்னால், அங்கே தனியார் கல்லூரியில் கூடுதம் கட்டணம் செலுத்தி படிக்கவேண்டும். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு, இன்றைக்கு வசதி படைத்தவர்கள் படிப்பதுபோல ஏழை எளிய மக்களும் கல்வி பயில வேண்டும் என்ற எண்ணத்தில், 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார். பள்ளியிலே படிக்கும் குழந்தைகளுக்கு காலணி, சீருடை, புத்தகம், நோட்டு கொண்டுவருவதற்கு பை ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு திருவாரூர் போன்ற இடத்தில் உள்ள குழந்தைகள் அதிக தூரம் படிக்கச் செல்லும் பொழுது அவர்களுக்கு செல்ல ஏதுவாக விலையில்லா சைக்கிள் வாங்கி

கொடுத்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இவ்வளவு எண்ணற்ற திட்டங்களை கொடுத்த காரணத்தினால் தான் இந்தியாவிலேயே கல்வியிலே இன்றைக்கு தமிழ்நாடு சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அந்த பெருமைக்கு முழு காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரூராட்சிப் பகுதியிலே இன்றைக்கு ஏழை எளியோருக்கு வீடுகட்டுவதற்காக மத்திய அரசோடு மாநில அரசும் சேர்ந்து 2,10,000 ரூபாய் மானியமாகக் கொடுத்து உதவி செய்கின்றன. இன்றைக்கு பலபேர் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குடிசையில் வாழ்கின்ற ஏழைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானியமாக கொடுத்து நல்ல வீடுகள் கட்டுவதற்கு உதவு செய்கின்றன. அந்த திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை சந்தித்த போது, நான் தமிழகத்திற்கு அதிகமான வீடுகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர் சிரித்துக் கொண்டே நிச்சயமாக தருவேன் என்று சொன்னார். அண்மையிலே ராமேஸ்வரம் வந்திருந்தார். அந்த பொது கூட்டத்திலே பேசினார். அவர் உரையாற்றுகின்ற போது, தமிழகத்திற்கு எத்தனை லட்சம் வீடுகள் வேண்டுமானாலும் தருகிறேன் என்ற உறுதிமொழியை தந்தார். சிலபேர் சொல்லி கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி டெல்லி செல்கிறார்கள். பாரதப் பிரதமரை சந்திக்கிறார்கள். எந்த திட்டத்தை கொண்டு வந்தார்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள் அடிக்கடி டெல்லி சென்று பாரதப் பிதமரை சந்தித்ததன் காரணமாக தான், ராமேஸ்வரம் பொது கூட்டத்திலே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் எவ்வளவு வீடுகள்

வேண்டுமானாலும் தமிழகத்திற்கு தருவேன் என்ற உறுதிமொழியை தந்து சென்றார்கள். ஆக, ஏழை எளிய ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு பேரூராட்சி நகராட்சி பகுதிகளிலே வசிக்கும் மக்கள் வீடு கட்டுவதற்காக 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானியமாக அரசு தருவதற்கு முடிவெடுத்து இன்றைக்கு தரக்கூடிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல நெசவாளர்களுக்கு மின்கட்டண சலுகை. இன்றைக்கு நிறைய திட்டங்களை அம்மா அவர்களுடைய அரசு வாரி வாரி வழங்கி வருகிறது.

இன்னும் பலபேர் பேசுகிறார்கள். இந்த ஆட்சியை எப்படியாவது கலைக்க வேண்டும். இந்த ஆட்சி மீது தொடர்ந்து தவறான செய்தியை வெளியிட்டு கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி நாட்டு மக்கள் பயனடைந்து இருக்கிறார்கள்.

அதே வழியில் அம்மாவினுடைய அரசு இந்த ஆறு மாத காலத்திலே பல்வேறு திட்டங்களை வகுத்து தந்து நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் நேரத்திலே குறிப்பிட்ட வாக்குறுதிகளை எல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நனவாக்கினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்.

இன்றைக்கு தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது. சுகாதார வசதியும் சிறந்து விளங்குகிறது. கல்வியிலே சிறந்து விளங்குகிறது.

அம்மாவினுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 140 ஆண்டுகாலம் இல்லாத கடுமையான வறட்சி. இந்த வறட்சியால் மேட்டூர் அணையில் கூட தண்ணீர் இல்லை. ஏனவே, பாசனத்திற்கு வேண்டிய நீர் நம்முடைய திருவாரூர் விவசாயிகளுக்கு அளிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட வறட்சி இருந்தும், விலைவாசி உயராமல் அம்மாவின் அரசு பார்த்துக் கொண்டது.

அதேபோல, மக்களுக்கு தேவையான வேலைவாய்ப்பு அளித்துக் கொண்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேவையான நிவாரணத் தொகை வழங்கி கொண்டிருக்கிறது. அம்மாவினுடைய அரசு இன்றைக்கு காப்பீட்டுத் தொகை வழங்கிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு.காமராஜ் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார். உங்களுடைய அமைச்சர் திரு.காமராஜ் அவர்கள் உங்கள் மாவட்டத்திற்கு எந்த கோரிக்கையும் செய்து கொடுப்பார்கள். அவர் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசின் சார்பாக நான் இப்பொழுது சில அறிவிப்புகளை அறிவிக்கிறேன்.

**<u>திருவாரூர் மாவட்டம் – அறிவிப்புகள்</u>**

- வலங்கைமான் வட்டத்தில் உள்ள வலங்கைமான் மற்றும் அரித்துவாரமங்கலம், காவல் நிலையங்களை தஞ்சாவூர் மாவட்ட காவல் சரகத்தில் இருந்து மாற்றப்பட்டு, திருவாரூர் மாவட்ட காவல் சரகத்துடன் சேர்க்கப்படும்.

- வலங்கைமான் மற்றும் ஆலங்குடி மின்வாரிய அலுவலகங்களை தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தில் இருந்து, திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தில் சேர்க்கப்படும்.

- மன்னார்குடி வட்டம் சவளக்காரன் கிராமத்தில் 110 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்படும்.

- குடவாசல் பேருந்து நிலையத்திற்கு புதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி மேம்படுத்தப்படும்.

- குடவாசல் ஒன்றியம் மணப்பறவை – குடவாசல் பேரூராட்சி ஏரூர்ந்தவாடி வழியாக, கும்பகோணம் சாலையை இணைக்கும் வகையில், சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் மற்றும் சுற்றுச்சாலை அமைக்கப்படும்.

- மன்னார்குடி நகராட்சியையும் – கர்த்தநாதபுரத்தையும் இணைக்கும் வகையில் பாமிணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கப்படும்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு.ராமராஜன் அவர்கள் எங்கள் பகுதியிலே அதிக தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று நிலத்தடி நீரை செரிவூட்ட வேண்டும் ஆங்காங்கே தேங்குகின்ற மழைநீர் ஓடைகளின் இடையிலே தடுப்பணைகள் கட்டப்பட்டு தண்ணீரை தேக்கி விவசாயத்திற்கு தேவையான நீரை தேக்கிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல குடவாசலிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். மாண்புமிகு அம்மாவுடைய அரசு இக்கல்லூரியை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அனுமதி அளித்து கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பேசும் போது குடவாசலில் புதிதாக அம்மாவின் அரசால் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அவரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்களும் கோரிக்கை வைத்தார். இருவரும் சேர்ந்து அந்த கல்லூரிக்கு பெயர் சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று அக்கல்லூரிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு சாதனை மேல் சாதனைகளை படைத்து கொண்டிருக்கிறது இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி இன்றைக்கு இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதற்கு

காரணகர்த்தவாக இருந்த உங்களுடைய மாவட்டத் தலைவர் மண்ணின் மைந்தர் திரு. காமராஜ் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா போல் அல்லாமல் ஒரு மாநில மாநாடு போல் காட்சியளிக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கே நோக்கினாலும், எந்த திசையை நோக்கினாலும் மக்கள் வெள்ளம் பார்க்கின்றோம். அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா சிறக்க வேண்டும் என்பதற்காக பட்டிதொட்டி எல்லாம் இருந்து வந்து சிறப்பித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி பாராட்டி,

இந்த சீர்மிகு விழாவிற்காக ஒற்றுமையோடு
உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும்
கழகத் தொண்டர்களுக்கும்,
பொதுமக்களுக்கும்,

பலவகையிலும்
ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும்,
காவல்துறையினருக்கும் என்னுடைய
பாராட்டுகளையும், வாழ்த்துகளையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே!
இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**